(முழுப் பதிப்புரிமையுடையது)
(All rights reseved)



கொரோணா தொற்று நோய்

விசேட பாடசாலை விடுமுறை கால கல்வி வேலைத்திட்டம்- 2020

தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கு

14 தலைப்புக்களின் கீழான நுண்ணறிவு செயலட்டை

இலக்கம் -12 தர்க்கித்தல்

ஆக்கம்.

T.F.SHUHOOD.

ஆசிரிய ஆலோசகர்-

வலயக் கல்விப் பணிமனை - ஹம்பாந்தோட்டை.

071-182-6-181 – 077-635-8-304

அன்பின் சிறார்களே! உலகம் முழுவதும் பரவி வரும் கொரோணா வைரஸ் காரணமாக உங்களுக்கு விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் வீட்டை விட்டு வெளியே செல்லாமல் பாதுகாப்பாக வீட்டில் இருந்தவாறே இங்கு காணப்படும் பயிற்சியையும் மேலதிக பயிற்சிகளையும் செய்து உங்கள் கல்விச் செயற்பாட்டை தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் படியும் வீணாக தொலைக்காட்சி பார்த்து காலத்தைக் கழிக்க வேண்டாம் என்றும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இந்த தொகுப்பில் தர்க்கித்தல் தொடர்பான மாதிரி பயிற்சிகள் சிலவற்றை ஒன்று திரட்டி உங்கள் கைகளில் வழங்கியிருக்கின்றேன் அவைகளை நன்றாக விளங்கிக் கொண்டு இயலுமான வரையில் சுயமாக செய்து பயனடையும்படி கேட்டுக் கொள்கிறேன். - நன்றி



www.kalvi.lk

12)தர்க்கித்தல்

1) எமது பாடசாலை கிரிக்கட் அணியிலுள்ள அனைவரும் உயர்ந்தவர்களாகும். நஸீரும் எமது பாடசாலையிலுள்ள உயர்ந்த மாணவனாகும். அதன்படி நஸீரும் எமது பாடசாலை கிரிக்கட் அணியிலுள்ள ஒருவனாகும் இக்கூற்று.

1.சரியானது 2.பிழையானது 3.கூறமுடியாது

2) ஒரு பெட்டியில் ஐந்து நீல நிற மாபில்களும் பத்து சிவப்பு நிற மாபில்களும் காணப்பட்டன. நான் கண்களை மூடிக் கொண்டு ஒரு மாபிலை எடுத்தேன் அது நீல நிற மாபிலாகும் இக் கூற்று.

1.சரியானது 2.பிழையானது 3.கூறமுடியாது

3) A யின் வயது 15 வருடங்களுக்கு குறைந்தது. B யின் வயது 15 வருடங்களுக்கு கூடியது.Cயின் வயது 20 வருடங்களுக்கு குறைந்தது அதன்படி

1.வயது மிகக் கூடியவர் B ஆகும் 2. வயது மிகக் குறைந்தவர் A

3.வயது மிகக் கூடியவர் C ஆகும்

4) சரத் பார ஊர்தியில் பயணஞ் செய்கிறான். சுனில் விமானத்தில் பயணஞ் செய்கிறான்.விமல் படகில் பயணஞ் செய்கிறான் இதன்படி

1.மிக வேகமாக செல்பவன் சுனில் ஆவான்.

2.மூவரும் தரை வாகனத்தில் செல்கின்றனர்.

3.எல்லா வாகனங்களும் சக்கரத்தின் மீது பயணஞ் செய்கின்றன.

5) நாய் மனிதனுடன் மிக நெருங்கிப் பழகும் பிராணியாகும். ஏனெனில்

1.நாய் அதிகமான வீடுகளில் வளர்க்கப்படுவதால்

2.நாய் மனிதர்களின் நண்பன் என்றபடியால்

3.நாயினால் மனிதனுக்கு தீங்கு ஏற்படாமையால்

6) அவர்கள் எறும்புக் கூட்டம் போல் வேலை செய்கின்றனர் இதிலிருந்து விளங்குவது

1.அவர்கள் எறும்புடன் வேலை செய்கின்றனர்

2.அவர்கள் மெதுவாக வேலை செய்கின்றனர்

3.அவர்கள் சுறுசுறுப்புடன் ஒற்றுமையாக வேலை செய்கின்றனர்

www.ikedu.lk

⁂ பின்வரும் பந்தியை வாசித்து தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரி எனின் சரி எனவும் பிழையெனின் பிழை எனவும் எழுதுக கூற முடியாவிட்டால் வட்டம் இடுக.

நாம் அனைவரும் பேருந்தில் ஏறி யன்னல் அருகிலுள்ள ஆசனத்தில் அமர்ந்து கொண்டோம்.பிற்பகல் இரண்டு மணிக்கு தொடங்கிய எமது பயணத்தில் மொத்தமாக அறுபது பேர் கலந்து கொண்டனர்.எமது பயணம் ஹம்பாந்தோட்டையிலிருந்து ஆரம்பமானது. எம்முடன் ஐந்து ஆசிரியர்களும் மூன்று பெற்றோர்களும் வந்திருந்தார்கள்.பெற்றோர்கள் எமக்குத் தேவையான சிற்றுண்டிகளையும் கொண்டு வந்திருந்தனர். நாம் அனைவரும் மகிழ்ச்சியாக இருந்தோம்.இருள் சூழத்தொடங்கியதும் எமது பயணத்தை முடித்துக் கொண்டு மீண்டும் வீடு நோக்கி வந்தோம்.

1. நாம் பயணஞ் செய்தது கொழும்பு நோக்கியாகும். ( )
2. நாம் பயணம் சென்றது பேருந்தில் ஆகும். ( )
3. நாம் பயணஞ் செய்தது இரவில் ஆகும் . ( )
4. எமது பயணத்தில் ஆண்கள் மட்டும் கலந்து கொண்டார்கள் ( )
5. எமது பயணம் நள்ளிரவில் முடிவடைந்தது. ( )
6. பெற்றோர்கள் எமக்குத் தேவையான உணவை தயாரித்தார்கள் ( )

❖ பின்வரும் பந்தியை வாசித்து தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரி எனின் சரி எனவும் பிழையெனின் பிழை எனவும் கூற முடியாவிட்டால் வட்டமும் இடுக.

பெரியப்பா எங்கள் வீட்டிலுள்ள அனைவருக்கும் அநுராதபுரத்திலுள்ள ருவன்வலிசாய விகாரையைப் பார்க்கச் செல்ல வரும்படி அழைத்திருந்தார். எனினும் நானும் அப்பாவும் மாத்திரம் அங்கு செல்ல விருப்பம் தெரிவித்திருந்தோம். பெரியப்பா வீட்டிலிருந்து பெரியப்பாவும் பெரியம்மாவும் அவர்களது மகளும் பயணத்தில் கலந்து கொண்டனர். என்னுடைய பாடசாலைத் தோழர்கள் மூவர் அன்றைய பயணத்தில் சேர்ந்துக் கொள்ள விருப்பம் தெரிவித்திருந்தனர் எனினும் அவர்களில் இருவர் தான் கடைசி நேரத்தில் கலந்து கொண்டனர். போகும் வழியில் நாம் நேநீர் குடித்துக் கொண்டு சென்றோம்.

1. பயணஞ் செய்தவர்களது மொத்தத் தொகை ஒன்பது ஆகும் ( )
2. நாம் பயணம் சென்றது பேருந்தில் ஆகும். ( )
3. இப்பயணத்தில் அதிகமாக இருந்தவர்கள் பெண்கள் ஆகும். ( )
4. வழியில் நாம் வாகனத்தை நிறுத்தி இளநீர் குடித்தோம் ( )
5. என்னுடைய தோழர்கள் இருவர் பயணத்தில்கலந்து கொண்டனர். ( )

www.ikedu.lk

⁂ பொருத்தமான விடையைத் தெரிவு செய்து கீறிடுக.

உங்கள் அனைவரினதும் சுக நலனை அறிய ஆசையாக இருக்கிறேன். நான் இங்கு வந்து இப்பொழுது இரண்டு மாதங்கள் ஆகின்றன. தங்குமிடத்தில் வழங்கப்படும் உணவுப் பானங்கள் உங்கள் கைகளால் சமைத்துத் தருவதைப் போல் சுவையாக இல்லை. ஆனாலும் வீட்டை விட்டு தூரமாக இருப்பது கவலையாக இருக்கின்றது. மாலையில் மற்ற பிள்ளைகள் விளையாட செல்லும் போது நான் வாசிகசாலைக்குச் சென்று புத்தகங்கள் வாசிப்பதில் காலத்தை செலவிடுகிறேன்.

1. கடிதத்தை எழுதுகின்ற பிள்ளை தற்போது இருப்பது வெளிநாட்டிலாகும்.

   1. ஆம் 2. இல்லை 3. கூற முடியாது.

2. இக் கடிதத்தை எழுதியது தனது வீட்டிலுள்ள ஒருவருக்காகும்.

   1. ஆம் 2. இல்லை 3. கூற முடியாது.

3. இக் கடிதத்தை எழுதுகின்ற பிள்ளை படிப்பதற்காக வீட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

   1. ஆம் 2. இல்லை 3. கூற முடியாது.

4. கடிதத்தை எழுதுகின்ற பிள்ளை சுகநலன் விசாரிப்பது தனது தாயிடமாகும்.

   1. ஆம் 2. இல்லை 3. கூற முடியாது.

5. இக் கடிதத்தை எழுதுகின்ற பிள்ளை வாசிப்பதற்கு அதிக விருப்பமுடையவராகும்.

   1. ஆம் 2. இல்லை 3. கூற முடியாது.

⁂ பின்வரும் கூற்றுக்கள் எப்போதும் உண்மை எனின் சரி என எழுதுக உண்மை அல்ல எனின் பிழை என எழுதுக.

1. மீன்கள் நீரில் உயிர் வாழும். ( )
2. பலகையினால் மாத்திரமே கதிரை மேசைகள் செய்யலாம். ( )
3. முக்கோணத்தில் மூன்று பக்கங்கள் உண்டு . ( )
4. எல்லா பறவைகளுக்கும் பறக்க முடியும். ( )
5. நுளம்புகள் கடிப்பதால் நோய்கள் ஏற்படுகின்றன. ( )
6. குரக்கனை மாவாக அரைத்து மாத்திரமே சாப்பிடலாம். ( )
7. நீருக்கு மணம் , சுவை , நிறம் , என்பன இல்லை . ( )

www.ikeduk

⁂ சரியான விடையைக் கீறிடுக

1. கடலில் எப்போதும் இருப்பது.

   1. கப்பல் 2 மீன் 3.மனிதர்கள்

2. கடையில் எப்போதும் இருப்பது.

   1. பணம் 2 வியாபாரி 3.பொருட்கள்

3. பாடசாலையில் எப்போதும் இருப்பது.

   1. கட்டிடம் 2 ஆசிரியர் 3.பிள்ளைகள்

4. வீட்டில் எப்போதும் இருப்பது.

   1. யன்னல் 2 கதவு 3. கூரை

5. மின் குமிழில் எப்போதும் இருப்பது.

   1. மின்சாரம் 2 வெளிச்சம் 3. பாரம்

6. புத்தகமொன்றில் எப்போதும் இருப்பது.

   1. கதை 2 பக்கம் 3. படம்

7. காட்டில் எப்போதும் இருப்பது.

   1. பறவைகள் 2 மிருகங்கள் 3. மரங்கள்

8. கிணறொன்றில் எப்போதும் இருப்பது.

   1. நீர் 2 வாளி 3. ஆழம்

9. ஊரொன்றில் அதிகமாக இருப்பது.

   1. வீதிகள் 2 வீடுகள் 3. கடைகள்

10. பிறந்த குழந்தையொன்று எப்போதாவது

    1. சிரிக்கும் 2 பேசும் 3. இறக்கும்

⁂ பிழையாக எழுதப்பட்டுள்ள சொல்லைக் கோடிட்டு அதனை திருத்தமாக அடைப்பினுள் மீண்டும் எழுதுக.

(1) தங்கை நடனம் அடினாள். ( )

(2) அம்மா முகம் கழுவிக்கெண்டு போனாள். ( )

(3) வானெலி கட்புல செவிப்புலச் சாதனமாகும். ( )

www.lkedu.lk

(4) போத்தலென்று மேசையின் மேல் காணப்படுகிறது. ( )

(5) பசு புல் மேய்கிறதூ. ( )

(6) நேற்று கடும் மழை பேய்தது. ( )

(7) கோடே காலத்தில் வியர்வை அதிகம். ( )

(8) அவன் விமான நீலையத்துக்குச் சென்றான். ( )

(9) நாம் எப்போதும் உண்மை பேசுவொம். ( )

(10) எமது நாடு அழகான திவு. ( )

⁂ பின்வரும் சொற்களுக்கான சரியான தமிழ் சொல்லை அடைப்பில் எழுதுக.

1) வெத்திலை ( )

2) நோம்பு ( )

3) காச்சல் ( )

4) வேர்வை ( )

5) சவுக்காரம் ( )

6) மொழுகுதிரி ( )

7) தும்புக்கட்டை ( )

8) பேத்தி ( )

9) காத்து ( )

10) தாவம் ( )

11) கப்பூரம் ( )

12) சிகப்பு ( )

13) தண்ணி ( )

14) அர்ப்புதம் ( )

15) முழித்தல் ( )

16) ஒத்தடம் ( )

17) நாத்தம் ( )

18) பரீட்ச்சை ( )

19) முயற்ச்சி ( )

20) தொலைப்பேசி ( )

www.lkedu.lk

அன்பின் பெற்றோர்கள் அறிய,

உங்கள் சிறார்களுக்கு விடுமுறை காலத்தில் எவ்வாறான பயிற்சிகளை வழங்க வேண்டும் , எப்போது வழங்க வேண்டும் போன்ற பிரச்சினைகளுக்கு ஒரு சிறிய தீர்வாக இந்த நுண்ணறிவுத் தொகுப்பினை பிரசுரித்துள்ளேன். இங்கு காணப்படும் பயிற்சிகளை ஒரு உதாரணமான பயிற்சியாகக்கருதி இதுபோன்ற பல வினாக்களை உருவாக்கி உங்கள் பிள்ளைகளுக்கு தினமும் ஒரு பயிற்சியாக குறிப்பிட்ட நேரத்தில் வழங்கி அவர்களின் புலமைப்பரிசில் பரீட்சைக்கான தயார்படுத்தலை உறுதிப்படுத்திக் கொள்ளும் ஒரு சந்தர்ப்பமாக இந்த விடுமுறையை ஆக்கிக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்த நுண்ணறிவுத் தொகுப்பினை யாரும் **வியாபார நோக்கத்திற்குப்** பயன்படுத்த வேண்டாம் என்றும் மிகவும் வினயமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

T.F.SHUHOOD.

ஆசிரிய ஆலோசகர்

வலயக் கல்விப் பணிமனை - ஹம்பாந்தோட்டை.

❖தொலைபேசி இல

071-182-6-181 – 077-635-8-304 – 047-222-1-503

❖மின்னஞ்சல்

primaryisa@gmail.com

❖தொடர்புகளுக்கு

STUDY CENTRE

(The Centre for Primary Education)

48/1, BARRACK STREET,

HAMBANTOTA.

www.lkedu.lk